1981 மார்ச் 23]

சூட்டுப்பொத்தையில் சிமெண்ட் ஆலை.

*வினா எண். 450—திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தாலுக்கா, ராதாபுரம் தொகுதி வள்ளியூர் பகுதியில் உள்ள சூட்டுப்பொத்தையில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் வகையில் அப்பகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. எஸ். ராமமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வட்டாரத்திலே மூலப் பொருள்கள் அதிகமாக கிடைக்கிறது என்று ஆய்விலே தெரிய வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே மீண்டும் புனர் பரிசீலனை செய்து தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே பெரிய சிமெண்ட் ஆலைகள் நிறுவுவதற்கு போதுமான அளவு மூலப்பொருள்கள் இல்லை. சிறிய அளவிலே சிமெண்ட் ஆலைகள் நிறுவலாம் என்று சிமெண்ட் நிறுவனம் ஆய்வு செய்து அரசுக்கு அனுப்பி இருந்தது. ஏற்கனவே பெரிய சிமெண்ட் ஆலைகள் நடத்தினால், இவர்களுக்கு மத்திய அரசு வேண்டிய பிரத்தியேக சலுகைகளை ஆராய்ந்து அறிவித்திருக்கிற காரணத்தினால் சிறிய ஆலைகளை சிமெண்ட் கார்ப்பரேஷன் நடத்தும் திட்டம் கைவிட்டுவிட்டது. தனியார்கள் யாராவது சிறிய ஆலைகள் போட முன்வந்தால் அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

[முற்பகல் 10–20]

திரு. மு. ஜான் வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி வள்ளியூர் பகுதியில், காட்டுப் பொத்தையிலுள்ள சுண்ணாம்புக்கல் நிறையக் கிடைக்கிறது, அதை எல்லாம் தாழை

யூத்து சிமெண்ட் கம்பெனி எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள், அவர்கள் அப்படி எடுத்துச் செல்லாமல் தடை செய்து வள்ளியூரிலேயே சிமெண்ட் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

பேரூர் சர்க்கரை ஆலைத் திட்டம்

*வினா எண். 451—திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பேரூர் சர்க்கரை ஆலைத் திட்டம் நிறைவேற்ற அரசு ஏதாவது முயற்சி எடுத்துள்ளதா ?

(ஆ) இல்லை என்றால், பொது மக்களிடம் வாங்கிய பங்குத் தொகையை திருப்பிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியீடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

வினாக்களுக்கு விடையளிப்பதில் ஏற்படும் காலதாமதம்

*திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சர்களிடமிருந்து பதிலை எதிர்பார்த்து போடப்பட்ட கேள்விகளுக்கு பதில்களை 15 நாட்களுக்குள் அளிக்க வேண்டும் என்று சொன்னீர்கள், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னாலே, கேட்ட கேள்விகளுக்கு இன்றைக்கு